சுருக்கம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மீனவர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.19.56 கோடி கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(மீன்.3)துறை

அரசு ஆணை(நிலை) எண். 10 நாள். 25.1.2007

படிக்க:

1. மீன்துறை சிறப்பு ஆணையர் ந.க.எண்.906/டி4/2005, நாள் 29.5.2006 மற்றும் 8.10.2006.

மேலும் படிக்க:

2. மாண்புமிகு பிரதமரின் இணைச்செயலர் கடித எண்.82 (12567) / 2005–PMF, நாள் 19.10.2005.

-----

ஆணை:–

மீன்துறை சிறப்பு ஆணையர், தமது கடிதத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் (NCDC) மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (TAFCOFED) போன்ற கூட்டுறவு நிறுவனங்களால், ஒருங்கிணைந்த கடலோர மீன் வளர்ச்சித் திட்டம் பகுதி–I மற்றும் பகுதி–II –இன் கீழ் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன் வட்டி மற்றும் அபராத வட்டித் தொகையான ரூ.1,956.19 இலட்சங்கள் தொகையை தள்ளுபடி செய்வதற்கான கருத்துருவை, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு சிறப்பு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். பின்னர், தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் அரசால், மீன்வர்களுக்கு தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் தொடங்கப்படுவதற்கு முன்பும் பின்பும் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையான ரூ.2,863.49 இலட்சம் தொகையை தள்ளுபடி செய்யக் கோரி மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு சிறப்பு அலுவலருக்கு மற்றொரு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். ஆனால், மறு வாழ்வு மற்றும் புனரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் மீனவர்களுக்கு தமிழ்நாடு மாநில தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் மூலம் வழங்கப்பட்ட ரூ.19.56 கோடி கடன் தொகையை மட்டும் தள்ளுபடி செய்வதற்கு பிரதமர் அலுவலகத்துக்கு பரிந்துரை செய்துள்ளதாகவும், பிரதமரின் அலுவலகமும் ரூ.19.56 கோடி கடன் தொகையைத் தள்ளுபடி செய்து அதற்கான காசோலையை 19.10.2006 அன்று விடுவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் ( TAFCOFED) துவக்கப்படுவதற்கு முன்புள்ள 1980 முதல் 1994 வரையிலான காலத்தில் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட ரூ.5.74 கோடி தொகையும், அரசால்

வழங்கப்பட்ட ரூ.3.33 கோடி தொகையும் சேர்த்து மொத்தம் ரூ.9.07 கோடி தொகையை தள்ளுபடி செய்ய அவர் பரிந்துரைக்கவில்லை எனவும் மீன்துறை சிறப்பு ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மீன்துறை சிறப்பு ஆணையர், மீனவர்கள் சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்டு உடமைகளையும், மீன்பிடி உபகரணங்களையும் இழந்துள்ளதாகவும், எனவே அவர்களுக்கு இணையம் தொடங்கப்படுவதற்கு முன்னரும் பின்னரும் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையான ரூ.28.63 கோடியை ரத்து செய்ய வேண்டும் என்று அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. அவரது கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. மீன்துறை சிறப்பு ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையிலும், மாண்புமிகு பிரதமரின் தேசிய இயற்கை பேரிடர் நிவாரண திட்டத்தின்கீழ் ரூ.19.56 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும் அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது.

அ) தமிழ்நாடு மாநில தலைமை மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலம் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஒருங்கிணைந்த கடலோர மீனவர் வளர்ச்சித்திட்டம் பகுதி–I மற்றும் பகுதி–II –ன் கீழ் மீனவர்களுக்கு 31.7.2005 வரை வழங்கப்பட்ட கடன், வட்டி மற்றும் அபராத வட்டித் தொகையான ரூ.19.56 கோடியை அரசு தள்ளுபடி செய்கிறது.

ஆ) மீதமுள்ள ரூ.9.07 கோடி கடனை தள்ளுபடி செய்ய மத்திய அரசையும், தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தையும் தனியே அணுக கருத்துரு அனுப்புமாறு மீன்துறை சிறப்பு ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

இ) ஒருங்கிணைந்த கடலோர மீனவர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் மாநில அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகைக்கான வரவுக் கணக்கு தகுந்த ஒப்பளிப்பு ஆணை மூலம் ஒப்பளிக்கப்பட வேண்டும்.

ஈ) கடன் தள்ளுபடி குறித்து மீனவர்களுக்கு தனிப்பட்ட முறையில், எழுத்து வடிவில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட வேண்டும் இதற்குரிய தகுந்த பதிவுகள் அந்தந்த கூட்டுறவுச் சங்கப் பேரேடுகளிலும், தனிநபர்கள் கடன் கணக்குகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உ) தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையமும் இது போன்ற மீனவர் சங்கங்களின் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

ஊ) தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்துக்கு உரிய காலங்களில் மாநில அரசால் கடன் திருப்பிச் செலுத்தப்படுவதால், பிரதமரின் நிவாரணத் திட்ட நிதியின் கீழ் மீன்துறை சிறப்பு ஆணையரால் பெறப்பட்ட ரூ.19.56 கோடி தொகைக்கான காசோலையை மாநில அரசுக்கு கணக்கில் அவர் செலுத்த வேண்டும்.

4. இதற்கான கணக்குத் தலைப்பு விவரம்:-

Loan amount – Rs.934.34 lakhs – 6425-00- Loans for co-operation

| | | |
|---|---|---|
| 108 | - | Loans to other Co-operation Schemes in the IX Five Year Plan. |
| V | - | Schemes financed by autonomous bodies. |
| ZG | - | Loans to Co-operative Institutions and Banks controlled by Director of Fisheries. |
| 01 | - | Loans to Fishermen Co-operative Federation and Societies. |

(DPC 6425 00 108 ZG 010C) (Receipts)

Share capital amount –Rs.294.42 lakhs "4425-00-Capital outlay on Co-operation

| | | |
|---|---|---|
| 901 | - | Deduct – Receipts and Recoveries on capital account. |
| AB | - | Deduct – Receipts and Recoveries on capital Account. |
| 77 | - | Deduct – Recoveries . |
| 03 | - | Other Recoveries |

(DPC 4425 00 901 AB 7733)

Interest and Penal Interest amount - Rs.727.43 lakhs

| | | |
|---|---|---|
| 0049 | - | Interest Receipts |
| 04 | - | Interest Receipts of State / Union territory Governments. |
| 195 | - | Interest from Co-operative Societies. |
| AK | - | Loans under the control of Director of Fisheries. |
| 01 | - | Loans to Tamil Nadu State Apex Co-operative Fisheries Federation Limited. |

(DPC 0049 04 195 AK 0104) (Receipts)

5. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு.எண்.82855/AH&F/06, நாள் 22.1.2007 ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

லீனா நாயர்
அரசுச் செயலர்.

பெறுநர்
மீன்துறை இயக்குநர், சென்னை–6.
தனி அலுவலர், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு
இணையம் லிமிடெட், சென்னை–28.
(மீன்துறை இயக்குநர், சென்னை–6 மூலமாக)
வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/18 (பெயரிலும்)
மாநில கணக்காய்வுத் தலைவர், (தணிக்கை) சென்னை–35/35 (பெயரிலும்)

நகல்:–
நிதித்துறை, சென்னை–9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
16/04/07